IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.36 /2014
Deposition of witness for DW2

Name : பொற்கொடி

Husband Name : ரேணு

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 12 day of June, 2023.

குறுக்கு விசாரணை

1. என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 பேர்கள் என் அண்ணன் சுப்பிரமணி, என் தங்கை கிருஷ்ணவேணி, தனபாக்கியம் மற்றும் மல்லிகா ஆகியோர்கள். என் அம்மா பெயர் ஜெயம்மா, என் அப்பா கோவிந்தராஜ். என் தாத்தா பெயர் பாலமந்திரி. என்அப்பாவுடன் உடன் பிறந்தவர்கள் 3 பேர்கள். என் தாத்தா பாலமந்திரிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் சர்வே எண்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மொத்தம் எவ்வளவு சொத்து உள்ளது என்றும் எனக்கு தெரியாது.

2. என் தாத்தாவினுடைய சொத்துக்கள் அவரது பிள்ளைகளான என் அப்பா, அப்பாசாமி, ஆதி மற்றும் ராஜா ஆகியோர்களுக்கிடையே பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட பாகசொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. அதன் சர்வே எண்களும் எனக்கு தெரியாது. அந்த சர்வே எண்களுக்குரிய விஸ்தீரணமும் எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் ஆன பிறகு தான் என் அண்ணன் சுப்பிரமணிக்கு திருமணம் நடைபெற்றது. அதேபோல் என்தங்கைகள் தனபாக்கியம், கிருஷ்ணவேணி ஆகியோருக்கும் திருமணம் நடைபெற்ற பிறகு தான் என் அண்ணன் திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான்.

3. என் அண்ணனுக்கு திருமணம் நடந்த பிறகு தான் வாதி மல்லிகாவிற்கு திருமணம் நடைபெற்றது. என் அப்பா எங்களுக்கு திருமண ஏற்பாடுகள் நல்ல முறையில் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என் அண்ணன் இரண்டு திருமணம் செய்து கொண்டார் என்றால்

சரிதான். அவரின் முதல் மனைவி பெயர் எனக்கு தெரியாது. என் அண்ணனின் முதல் திருமணத்தில் நான் பங்கெடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். அவரின் முதல் மனைவி உடனான திருமணத்தின் பயனாக அவர்களுக்கு செல்வம் என்ற மகன் பிறந்தார். அதன்பிறகு என் அண்ணனின் முதல் மனைவி இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

4. என் அண்ணனின் இரண்டாவது திருமணம் நடைபெற்றதும், அப்போது நடைபெற்ற பிரச்சனைகள் குறித்தும ' எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். என் அண்ணனின் இரண்டாவது திருமணத்திற்கு என்அப்பா சம்மதிக்கவில்லை என்றால் சரியல்ல. என் அண்ணனின் இரண்டாவது மனைவி அக்னாவரம் என்ற கிராமத்தைச்சேர்ந்தவர். திருமணத்திற்கு பிறகு அக்னாவரத்தில் என் அண்ணன் அவரது இரண்டாவது மனைவியுடன் குடும்பம் நடத்தி அவர்களுக்கு குழந்தைகளும் பிறந்தது என்றால், திருமணத்திற்கு பிறகு என் அண்ணன் என்அப்பாவுடன் தான் வடுகன்குட்டை கிராமத்தில் வசித்து வந்தார்.

5. என் அண்ணனின் இரண்டாவது மனைவி பெயர் காசியம்மாள் என்றால் சரிதான். என் அண்ணனின் இரண்டாவது திருமணத்தின் மூலம் ராஜேந்திரன் மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் பிறந்தார்கள். தற்பொழுதும் அக்னாவரத்தில் தான் காசியம்மாள், ராஜேந்திரன் மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் அப்பாவின் பாகசொத்தில் என் அண்ணன் சுப்பிரமணி அவருக்குரிய பங்கை 1979-ம் ஆண்டு விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல.

6. விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்தது உண்மை என்றும், அவர் அதன்பிறகு வீட்டை கவனித்துக்கொள்ளவில்லை என்றும் வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா இறக்கும் வரையில் அவர்தான் எனக்கும் என் சகோதரிகளுக்கும் நல்லது செய்து கொடுத்தார் என்றால் சரிதான். என் அண்ணன் விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்தவிட்ட பின்பு எனக்கும், என் சகோதரிகளுக்கும் எந்த நல்லதும் செய்துகொடுக்கவில்லை என்றும், அவரின் இரண்டாவது மனைவியுடன் தான் அக்னாவரத்தில் வசித்து வந்தார் என்றால் சரியல்ல.

7. என் அப்பாவினுடைய பாகசொத்தில் நானும், வாதி மல்லிகா என் சகோதரிகள் கிருஷ்ணவேணி, தனபாக்கியம் ஆகியோர்கள் கூட்டாக இருந்து அனுபவம் செய்துவந்தோம் என்றால் சரிதான். என் அப்பா கோவிந்தராஜ் என் அம்மாவிற்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்திருந்த விவரம் எனக்கு தெரியாது. 1979-ல் என் அண்ணன் விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்தபின்பு நானும், என் சகோதரிகளும் என் பெற்றோர்களுடன் கூட்டாக வசித்து வந்த நிலையில் என் அப்பா, என் அம்மாவிற்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட்டின் அடிப்படையில் என் அம்மா என் அண்ணன் சுப்பிரமணிக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

8. என் அப்பா கோவிந்தராஜுவும் அவருக்குரிய பாகசொத்தை என் அண்ணன் சுப்பிரமணி பெயருக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என் தாத்தாவின் மூதாதையர் சொத்தானது என் அப்பாவிற்கு பாகம் பிரிக்கப்பட்டு கூட்டுரிமை சொத்தாக வந்து அதில் நாங்கள் கூட்டுரிமை பங்குதாரர்களாக இருந்துவருகிறோம் என்றால் சரியல்ல. கூட்டுரிமை சொத்துக்களாக வழக்கு சொத்து இருந்துள்ள நிலையில் எங்களின் ஒப்புதல் இல்லாமல் எழுதப்பட்ட மேற்படி உயில்கள் செல்லாது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

9. என் அப்பா கோவிந்தராஜ் அவருக்குரிய சொத்தை என் கணவர் ரேணுவிடம் கடந்த 1988-ல் அடமானம் வைத்து கடன் பெற்றிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. என் அப்பாவிடமிருந்து 30 செண்ட் சொத்தை என் கணவர் கிரயம் பெற்றார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எந்த சொத்துக்கள் மற்றும் அதன் சர்வே எண்கள் என் அப்பாவால் என் கணவரிடம் அடமானம் வைக்கப்பட்டது மற்றும் கிரையம் பெறப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

10. என் அப்பாவிடமிருந்து அடமானம் மற்றும் கிரையம் பெற்ற சொத்துக்களை சேர்த்து கூட்டுக்குடும்ப சொத்துக்களையும் சேர்த்து 1ம் பிரதிவாதி காசியம்மாள் மற்றும் அவரது

பிள்ளைகள் சேர்ந்து பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றும், அதில் நானும் என் சகோதரிகள் தனபாக்கியம் மற்றும் கிருஷ்ணவேணி ஆகியோர் கையொப்பமிட மறுத்துவிட்டோம் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. (வாதுரையில் இல்லாத விவரங்களை கேள்வி கேட்பதாக பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்கிறார்).

11. அவ்வாறு பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்ட பிறகு காட்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் நானும், என் சகோதரிகளும் மற்றும் வாதி மல்லிகாவும் ஆட்சேபணை தெரிவித்து மனு அளித்தோம் என்றால் இல்லை. நான் மேற்படி பாகப்பிரிவினையில் கையொப்பமிட மறுத்ததும், ஆட்சேபணை மனு அளித்ததும் உண்மை என்றும், வழக்கிற்காக அவ்வாறு இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. கூட்டுகுடும்ப சொத்தில் தான் வழக்கு சொத்து உள்ளது என்றும் இந்த வழக்கு குறித்து எந்த விவரமும் தெரியாமல் இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல்விசாரணை பிரமாணவாக்கு மூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.